உ

சிவமயம்

# பரகதி தரும் பன்னிரு திருமுறைப் பாமாலை



# அமரர் செல்லத்துரை தியாகராசா

வண்ணை ஸ்ரீ காமாட்சியம்பாள் தேவஸ்தான

ஓதுவார் மூர்த்திகள்

ஞாபகமாக வெளியிடப்பெற்றது.

வெளியீடு

அகில இலங்கைத் திருமுறை மன்றம்

102, அரசடி வீதி,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் செல்லத்துரை தியாகராசா



தோற்றம்
13 - 02 - 1928

மறைவு
12 - 02 - 2006

**திதி வெண்பா**

பார்த்திப வாண்டு பயன்தரு தைத்திங்கள்
பூர்வச் சதுர்த்தசி பூண்ணாளே - சீர்சிறப்பாய்
நாளும் இசைபாடும் நந்தியாகர் ஈசன்தன்
றாளுற்ற நாளென் றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2P8/882/I

உ

சிவமயம்

# ஈசன் அடிஇணையில் இன்புற்றிருக்கப் பிரார்த்தனை

அரசாங்க உத்தியோகத்தராயிருந்து ஓய்வுபெற்றவரும், வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான ஓதுவார்மூர்த்தியும், அகில இலங்கைத் திருமுறைமன்ற உறுப்பினரும் ஆகிய திருவாளர் செ.தியாகராசா அவர்கள் தேகவியோகம் எய்திய செய்தி , அவரை அறிந்த அனைவருக்கும் அதிர்ச்சி தருவதாகும். ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்திலும் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் பல்லாண்டு காலமாகப் பண்ணொன்ற அவர்பாடிய இசை, அவரை என்றும் எல்லார் மனத்திலும் நினைவில் இருத்தி வைத்திருக்கின்றது. எந்த விதமான கைம்மாறும் கருதாது அவர் ஆற்றியசேவை அனைவராலும் பாராட்டப்படுகிறது.

அன்னாரின் இழப்பினால் மிக்க துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிற் பாராயணஞ் செய்ய உதவியாக பரகதிதரும் பன்னிருதிருமுறைப் பாமாலையினை அமரர் செ.தியாகராசா அவர்களின் நினைவாக அகில இலங்கைத் திருமுறை மன்றம் வெளியிடுகின்றது. அனைவரையும் பாராயணஞ்செய்து பயன்படுத்துமாறு வேண்டுகின்றொம் அமரர் செ.தியாகராசா அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வ.பேரின்பநாயகம்,
தலைவர்,
அகில இலங்கைத் திருமுறைமன்றம்.

594, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

## முதலாம் திருமுறை

### திருத்தூங்கானைமாடம்

**பண் : பழந்தக்கராகம்** **இராகம் : ஆரபி**

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கு மிடங்கருதி நின்றீரெல்லா
மடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங்
கெழுமனைகள் தோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 01.

பிணிநீர சாதல் பிறத்தலிவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோ
டணிநீர மேலுல கமெய்தலுறி
லறிமின் குறைவில்லை ஆனேறுடை
மணிநீல கண்ட முடையபிரான்
மலைமக ளுந்தானு மகிழ்ந்துவாழும்,
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 02.

சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமா றறியா தலமந்துநீ
ரயர்ந்துங் குறைவில்லை ஆனேறுடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமாணலங்க விலங்கு கொன்றை
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 03.

ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லா
மனந்திரிந்து மண்ணில் மயங்காதுநீர்
மூன்று மதிலெய்த மூவாச்சிலை
முதல்வர்க் கிடம்போலு முகில்தோய்கொடி
தோன்றுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 04.

மயல்தீர்மை யில்லாத தோற்றம்மிவை
மரணத்தொ டொத்தழியு மாறாதலால்
வியல்தீர மேலுக மெய்தலுறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர வோங்கிய நாமங்களா
லோவாது நாளு மடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 05.

பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படல்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன்றுங் காலம் நமக்காதல்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்றுநற்
புனல்பொ திந்தபுன் சடையினானுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையூண் துகளோ டிடுக்கணெய்தி
யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூ ணெறிகருதி நின்றீரெல்லாம்
நீள்கழ லேநாளு நினைமின்சென்னிப்
பிறைசூ ழலங்க லிலங்குகொன்றை
பிணையும் பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 07.

பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லா
மிறையே பிரியா தெழுந்துபோதும்
கல்சூழரக்கன் கதறச் செய்தான்
காதலியுந் தானுங் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 08.

நோயும் பிணியு மருந்துயரமு
நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீரெல்லாம்
மலர்மிசைய நான்முகனும் மண்ணும்விண்ணும்
தாய அடியளந்தான் காணமாட்டாத்
தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 09.

பகடூர் பசிநலிய நோய்வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரு
மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்த பொய்ம்மொழிகள் தேறவேண்டா
திருந்திழையுந் தானும் பொருந்திவாழுந்
துகழ் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 10.

மண்ணார் முழவதிரும் மாடவீதி
வயற்காழி ஞானசம் பந்தன்நல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர்
பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்,
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங்
கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும்
விதியதுவே யாகும் வினைமாயுமே. 11.

திருச்சிற்றம்பலம்

# இரண்டாம் திருமுறை

## திருஆலவாய்த் திருநீற்றுப்பதிகம்

### பறையின் வரலாறு

**பண் - காந்தாரம்** **இராகம் - நவரோஸ்**

திருச்சிற்றம்பலம்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 01.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 02.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 03.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 04.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 05.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 06.

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 07.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. 09.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் திருநீறே. 10.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11.

திருச்சிற்றம்பலம்

**திருவாரூர்**

**பண் : காந்தாரம்** **இராகம் : நவரோஸ்**

திருச்சிற்றம்பலம்

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்ட வுண்டு
சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கி னாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய காள கண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 01.

தந்தையார் போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழை நெஞ்சே
அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிணங்குடர் தோல்நரம் பென்புசே ராக்கைதான் நிலாய தன்றால்
குணங்களார்க் கல்லது குற்றநீங் காதெனக் குலுங்கி னாயே
வணங்குவார் வானவர் தானவர் வைகலும் மனங்கொ டேத்தும்
அணங்கனா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 03

நீதியால் வாழ்கிலை நாள்செலா நின்றன நித்த நோய்கள்
வாதியா ஆதலால் நாளுநா ளின்பமே மருவி னாயே
சாதியார் கின்னரர் தருமனும் வருணனு மேத்து முக்கண்
ஆதியாரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல்நெஞ்சே. 04.

பிறவியால் வருவன கேடுள ஆதலாற் பெரிய இன்பத்
துறவியார்க் கல்லது துன்பநீங் காதெனத் தூங்கி னாயே
மறவல்நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்தநீர் மல்கு சென்னி
அறவனாரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல்நெஞ்சே. 05

செடிகொள்நோ யாக்கையம் பாம்பின்வாய்த் தேரைவாய்ச் சிறுபறவை
கடிகொள்பூந் தேன்சுவைத் தின்புறலாமென்று கருதி னாயே
முடிகளால் வானவர் முன்பணிந்தன்பரா யேத்து முக்கண்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 06

ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச் சோப்பி வட்டில்
மாறிவா முடம்பினார் படுவதோர் நடலைக்கு மயங்கி னாயே
மாறிலா வனமுலை மங்கையோர் பங்கினர் மதியம் வைத்த
ஆறனாரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 07

என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண் சுவரெறிந் திதுநம்மில்லம்
புன்புலால் நாறுதோல் போர்த்துப்பொல் லாமையான் முகடு கொண்டு
முன்பெலா மொன்பது வாய்தலார் குரம்பையின் மூழ்கிடாதே
அன்பனா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 08

தந்தைதாய் தன்னுடன் தோன்றினார் புத்திரர் தாரமென்னும்
பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப்பற்றி னாயே
வெந்தநீ றாடியா ராதியார் சோதியார் வேத கீதர்
எந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல்நெஞ்சே. 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடியமால் பிரமனும் நீண்டுமண் ணிடந்தின்னம் நேடிக் காணாப்
படியனார் பவளம்போ லுருவனார் பனிவ்ளர் மலையாள் பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி கண்டத் தெண்டோள்
அடிகளா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே. 10

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ்செயுங் காழி யூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம் பந்த னாரூர்
எல்லியம் போதெரி யாடுமெம் மீசனை யேத்து பாடல்
சொல்லவே வல்லவர் தீதிலா ரோதநீர் வைய கத்தே. 11

திருச்சிற்றம்பலம்

## மூன்றாம் திருமுறை

### நமச்சிவாயத் திருப்பதிகம்

**பண் : கௌசிகம்** **இராகம் : பைரவி**

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. 01.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாம நமச்சி வாயவே. 02.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே. 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயமன் தூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி
நயனன் நாம நமச்சி வாயவே. 04.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 05.

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 06.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாம நமச்சி வாயவே. 07.

இலங்கை மன்ன னெடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாம நமச்சி வாயவே. 08.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 09.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
செஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

## நான்காம் திருமுறை

**பண் : காந்தார பஞ்சமம்** **இராகம் : கேதார கௌளை**

### நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 01.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 02.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 03.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே. 05.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 06.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே. 07.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 08.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 09.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10.

திருச்சிற்றம்பலம்

இது திருநாவுக்கரசரைச் சமணர்கள் கற்றூணிற் கட்டிக் கடலிலே வீழ்த்தின போது ஓதி அருளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் திருமுறை

## திருநல்லம்

**பண் : திருக்குறுந்தொகை** **இராகம் : மாயமாளவகௌளை.**

திருச்சிற்றம்பலம்

கொல்லத் தான்நம னார்தமர் வந்தக்கால்
இல்லத் தார்செய்ய லாவதெ னேழைகாள்
நல்லத் தான்நமை யாளுடை யான்கழல்
சொல்லத் தான்வல்லி ரேல்துயர் தீருமே. 01

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே
துக்கந் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்
நக்கன் சேர்நல்லம் நண்ணுதல் நன்மையே. 02

பிணிகொள் வார்குழற் பேதையர் காதலால்
பணிகண் மேவிப் பயனில்லைப் பாவிகாள்
அணுக வேண்டி லரன்நெறி யாவது
நணுகு நாதன் நகர்திரு நல்லமே. 03

தமக்கு நல்லது தம்முயிர் போயினால்
இமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தானுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே. 04

உரை தளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே. 05

அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத ராரொடு மக்களுஞ் சுற்றமும்
பேத மாகிப் பிரிவதன் முன்னமே
நாதன் மேவிய நல்லம் நகர்தொழப்
போது மின்னெழு மின்புக லாகுமே. 07

வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யாய சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினோ
நம்மை யாளுடை யானிடம் நல்லமே. 08

கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலும் மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிடம் நல்லமே. 09

மல்லை மல்கிய தோளரக் கன்வலி
ஒல்லை யில்லொழித் தானுறை யும்பதி
நல்ல நல்ல மெனும்பெயர் நாவினால்
சொல்ல வல்லவர் தூநெறி சேர்வரே. 10

திருச்சிற்றம்பலம்

# ஐந்தாம் திருமுறை

## திருச்சேறை

**பண் : திருக்குறுந்தொகை** **இராகம் : மாயமாளவகௌளை.**

திருச்சிற்றம்பலம்

பூரி யாவரும் புண்ணியம் பொய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் செந்நெறி
நாரி பாகன்றன் நாம நவிலவே. 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னு வார்சடை வேத விழுப்பொருள்
செந்நெ லார்வயற் சேறையுட் செந்நெறி
மன்னு சோதிநம் பால்வந்து வைகவே. 02

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீங்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே. 03

மாடு தேடி மயக்கினில் வீழ்ந்துநீர்
ஓடி யெய்த்தும் பயனிலை ஊமர்காள்
சேடர் வாழ்சேறைச் செந்நெறி மேவிய
ஆட லான்தன் அடியடைந் துய்ம்மினே. 04

எண்ணி நாளும் எரியயிற் கூற்றுவன்
துண்ணென் தோன்றிற் றுரக்கும் வழிகண்டேன்
திண்ணன் சேறைத் திருச்செந் நெறியுறை
அண்ண லாருள் அஞ்சுவ தென்னுக்கே. 05

தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்ப மாஞ்சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருள் அஞ்சுவ தென்னுக்கே. 06

வைத்த மாடும் மடந்தைநல் லார்களும்
ஒத்தொவ் வாதவுற் றார்களு மென்செய்வார்
சித்தர் சேறைத் திருச்செந் நெறியுறை
அத்தர் தாமுள ரஞ்சுவ தென்னுக்கே. 07

குலங்க ளென்செய்வ குற்றங்க ளென்செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னாருள ரங்சுவ தென்னுக்கே. 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகி னால்வரும் பண்டுள சுற்றமும்
விழவி டாவிடில் வேண்டிய எய்தொணா
திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய
அழக னாருள ரஞ்சுவ தென்னுக்கே. 09

பொருந்து நீண்மலை யைப்பிடித் தேந்தினான்
வருந்த வூன்றி மலரடி வாங்கினான்
திருந்து சேறையிற் செந்நெறி மேவியங்
கிருந்த சோதியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

# ஆறாம் திருமுறை

## திருப்புகலூர்

**பண் : திருத்தாண்டகம்** **இராகம் : அரிகாம்போதி.**

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 01

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 03

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 04

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 05

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 06.

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 07

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறையுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்டமடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 08

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னணையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்னநடை மடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
# ஏழாம் திருமுறை
## திருப்பாண்டிக்கொடுமுடி

**பண் : பழம்பஞ்சுரம்** **இராகம் : சங்கராபரணம்.**

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 01.

இட்டனனும்மடி ஏத்துவாரிகழ்ந் திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலால்கரு தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 02.

ஓவுநாளுணர் வழியும்நாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலால்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்புகழ் எம்பிரானெந்தை தம்பிரானென்பொன் மாமணி
கல்லைஉந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 04.

அஞ்சினார்க்கரண் ஆதியென்றடி யேனும்நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள் நல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந் தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 05.

ஏடுவான்இளந் திங்கள்சூடினை யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்பத ரைக்கசைத்த அழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 06.

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந் தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார்குடைந் தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 07.

செம்பொன்நேர்சடை யாய்திரிபுரந் தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாகம் அமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 08.

சாரணன்றந்தை எம்பிரானெந்தை தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரொணாயிர கோடிதேவர் பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்தொழுங்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே. 09.

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத் தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை சொல்லுவார்க்கில்லைத் துன்பமே. 10.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் திருமுறை

## திருக்கேதாரம்

பண் : நட்டபாடை இராகம் : கெம்பீரநாட்டை

திருச்சிற்றம்பலம்

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெ னீரே. 01

பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளும் நாளால்அறம் உளவே
அறிவானிலும் அறிவானல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே. 02

கொம்பைப்பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி
நம்பன்நமை யாள்வானென்று நடுநாளையும் பகலும்
கம்பக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 03

உழக்கேஉண்டு படைத்திட்டிவைத் திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்திய மாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செயன்மின்
கிழக்கேசல மிடுவார்தொழு கேதாரமெ னீரே. 04

வாளோடிய தடங்கண்ணியர் வலையிலழுந் தாதே
நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாயுய்ம்மின் அடிகட்கிட மதுவேயெனி லிதுவே
கீளோடர வசைத்தானிடங் கேதாரமெ னீரே. 05

தளிசாலைகள் தவமாவது தம்மைப்பெறி லன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதாவிரி குமரி
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்குவடக் காகக்
கிளிவாழையொண் கனிகீறியுண் கேதாரமெ னீரே. 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணின்தமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே. 07

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயில்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக் கேதாரமெ னீரே. 08

பொதியேசுமந் துழல்வீர்பொதி அவமாவதும் அறியீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வதும் வினையால்
கதிசூழ்கட லிலங்கைக்கிறை மலங்கவரை யடர்த்துக்
கெதிபேறுசெய் திருந்தானிடங் கேதாரமெ னீரே. 09.

நாவின்மிசை அரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்திருக் கேதாரத்தை ஊரன்னுரை செய்த
பாஇன்தமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. 10.

திருச்சிற்றம்பலம்

# ஏழாம் திருமுறை

## திருநொடித்தான்மலை (திருக்கைலாயமலை)

**பண் : பஞ்சமம்** **இராகம் : ஆகிரி.**

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை யருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 02

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே. 03

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்(டு)
ஆழ முகந்தஎன்னை யதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன்பர மல்லதொரு
வேழ மருள்புரிந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 04

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 05

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 06

நிலைகெட விண்அதிர நிலமெங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை யுத்தமனே. 07

அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை யுத்தமனே. 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை யுத்தமனே. 09

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10.

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்

# எட்டாம் திருமுறை

### திருத்தில்லையில் அருளியது

### திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 01

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 03

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 04

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 05

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பவார்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பவார்ப்ப
பாடகம் மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 07

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 08

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 09

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனோடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நாகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்
காதியும் அந்தமும் ஆயினார்க்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புணர்ச்சிப்பத்து
## அத்துவிதவிலக்கணம்
### திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது
### திருச்சிற்றம்பலம்

சுடர்பொற் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை யாண்டுகொண்ட
கருணா லயனைக் கருமால்பிரமன்
தடைபட் டின்னுஞ் சாரமாட்டாத்
தன்னைத் தந்த வென்னாரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 01.

ஆற்ற கில்லேன் அயேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
ஊற்று மணற்போ னெக்குநெக் குள்ளே
உருகி யோல மிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 02

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விரும்பிலேனை
ஆண்டு கொண்ட என்னா ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார் முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லிக் கமலத் தயனு மாலும்
அல்லா தவரும் அமரர்கோனும்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்தசுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 04.

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை யாட்கொண்
டாவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 05.

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அயடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றே னென்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய வுண்ணீர்
உரோமம் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 06.

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்தகண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனையக் கண்ணீ ரருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 07.

நெக்கு நெக்குள் ளுருகி யுருகி
நின்று மிருந்துங் கிடந்து மெழுந்து
நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானாவிதத்தாற் கூத்துநவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழநோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்குநிற்ப தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 08

தாதாய் மூவே முலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதா மணியே யென்றென் றேத்தி
இரவும் பகலு மெழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 09

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பா னேயெம் பரமா வென்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாத்திரைப்பத்து

### அனுபவாதீதமுரைத்தல்

### தில்லையிலருளிச்செய்யப்பட்டது

திருச்சிற்றம்பலம்

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா வென்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே. 01

புகவே வேண்டா புலன்களினீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே யனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே. 02

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமாரெமதார் பாசமார்
என்ன மாயம் இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே. 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியா ரானீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன்
பூவார் கழற்கே புகவிடுமே. 04

விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே யொருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்க னாள்வான் புகழ்களையே. 05

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 06

நிற்பார் நிற்க நில்லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பீா் எல்லாந் தாழாதே
  நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
  பெறுதற் கரியன் பெருமானே. 07

பெருமான் பேரா னந்தத்துப்
  பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
  அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம்
  திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
  திருத்தாள் சென்று சேர்வோமே. 08

சேரக் கருதிச் சிந்தனையைத்
  திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
  பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
  ஆர்வங் கூர அழுந்துவீா்
போரப் புரிமின் சிவன் கழற்கே
  பொய்யிற் கிடந்து புரளாதே. 09

புரள்வாா் தொழுவாா் புகழ்வாராய்
  இன்றே வந்தா ளாகாதீா்
மருள்வீா் பின்னை மதிப்பாராா்
  மதியுட் கலங்கி மயங்குவீா்
தெருள்வீ ராகில் இதுசெய்ம்மின்
  சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளாா் பெறுவார் அகலிடத்தே
  அந்தோ அந்தோ வந்தோவே. 10.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் திருமுறை

### கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா

### திருமுகத்தலை

**பண் ~ பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே. 01

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளு
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்குதீங் கனியா யினியவா னந்த
வெள்ளமா யுள்ளமா யினையே. 02.

கன்னெகா வுள்ளக் கள்வனே நின்கட்
கசிவிலேன் கண்ணினீர் சொரியேன்
முன்னகா வொழியே னாயினுஞ் செழுநீர்
முகத்தலை யகத்தமர்ந் துறையும்
பன்னகா பரணா பவளவாய் மணியே
பாவியே னாவியுள் புகுந்த
தென்னகா ரணநீ யேழைநா யடியேற்
கெளிமையோ பெருமையா வதுவே. 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனா ருடையவென் னெஞ்சிற்
பாடிலா மணியே மணியுமிழ்ந் தொளிரும்
பரமனே பன்னகா பரணா
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினா யெனினு முள்புகுந் தடியே
னெஞ்செலா நிறைந்துநின் றாயே. 04.

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோ டென்னொடும் விளைந்த
இக்கலா முழுது மொழியவந் துள்புக்
கென்னையா ளாண்டநா யகனே
முக்கணா யகனே முழுதுல கிறைஞ்ச
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
பக்கலா னந்த மிடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே. 05.

புனல்படவுருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோ னிறைந்தவே தகத்தென்
மனநெக மகிழ்ந்தபே ரொளியே
முனைபடு மதின்மூன் றெரித்தநா யகனே
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
வினைபடு முடனீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே. 06.

விரியுநீ ராலக் கருமையுஞ் சாந்தின்
வெண்மையுஞ் செந்நிறத் தொளியுங்
கரியுநீ றாடுங் கனலுமொத் தொளிருங்
கழுத்திலோர் தனிவடங் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரியுமா றெல்லா முரிந்தழ கியையாய்
முகத்தலை யகத்தமர்ந் தாயைப்
பிரியுமா றுளதே பேய்களோஞ் செய்த
பிழைபொறுத் தாண்டபே ரொளியே. 07.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்று
மொழிவற நினைந்தவொண் சுடரே
முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியையா யினையே. 08.

அம்பரா வனலா வனிலமே புவிநீ
யம்புவே யிந்துவே யிரவி
உம்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்தவொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறி வாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரானாகி யாண்டநீ மீண்டே
எந்தையுந் தாயுமா யினையே. 09.

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை யகர்த்தமர்ந் தினிய
பாலுமா யமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி யிணைமேல்
ஆலையம் பாகி னனையசொற் கருவூ
ரமுதுறும் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடு மடியவ ரெல்லாஞ்
சிவபதங் குறுகிநின் றாரே. 10.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

**பண் ~ பஞ்சமம்**

**திருச்சிற்றம்பலம்**

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 01

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்ம்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 02

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த் திக்கென் னகநெக வூறும்
அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 04.

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செயவல்ல மென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்து நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 05.

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடு
ஆவிக்க முதையென் னார்வத்த னத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 06.

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீ
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகி
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
 கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
 புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
 வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. 08.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
 பாற்பட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
 மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
 பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. 09.

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
 வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
 போனகமு மருளிச்
சோதி மணிமுடித் தாமமுநாமமுந்
 தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசிலைத் தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. 10.

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
 யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
 மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
 மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே. 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

எந்தை யெந்தாய் சுற்றமுற்று மெமக்கமு
தாமெம் பிரானென்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியா
ரடிநாய் செப்புறை
அந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே. 13.

திருச்சிற்றம்பலம்

# பத்தாம் திருமுறை

## திருமூலர் அருளிய திருமந்திரம்

### யாக்கை நிலையாமை

திருச்சிற்றம்பலம்

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே. 01

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. 02

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராம் திருமுறை

### காரைக்காலம்மையார் பாடியருளிய

### திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

### பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர்பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே. 01

## பன்னிரண்டாம் திருமுறை

### சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவுலாவி யநீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசமர்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org